**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. S. MAHESH KUMAR ROUGH STONE QUARRY LEASE OVER AN EXTENT OF 1.60.0 HA LOCATED AT S.F.NO. 72 (PART) & 87/1 (PART), DORIPALLI VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 28.06.2023 AT 12.30 PM AT M/S. PVR&LMR KALYANA MANDAPAM, THEIRTHAM MAIN ROAD, NEAR GOVT HIGH SCHOOL, BERIGAI, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT PINCODE – 635 105.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. R. Saranya, I.A.S., | : | Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. T.Senthilkumar | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Er.S.Neelamagam | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 5 | Thiru S. Mahesh Kumar | : | The Proponent Thiru S. Mahesh Kumar Rough Stone Quarry |
| 6 | Thiru.P.Gopinath | : | EIA Consultant, M/s. Ecotech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 54 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Thiru S. Mahesh Kumar Rough Stone Quarry Lease over an Extent of 1.60.0 Ha Located at S.F.No. 72 (part) & 87/1 (Part), Doripalli Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 24.05.2023 and bit notices regarding public hearing was issued to the public of Dorripalli Village, Gopathi Village, Ungatti Village, Dasanapuram Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.P.Gopinath, EIA Consultant, M/s. Ecotech Labs Pvt Ltd of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express

their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Prakash, Doripalli Village:**

Thiru. Prakash has asked that, there is a mud road with extent of 1 to 1.5 km from the quarry, in that, water sprinklers should be sprinkled five times in a day on both sides in the morning and in evening to avoid dust emanation when heavy vehicles pass on the road. He also requested to avoid the movement of quarry heavy vehicles near the school for about 1 hour in the morning and evening and also to reduce the speed of the heavy vehicles to avoid accidents.

**2. Thiru. Manjunath, Doripalli Village:**

Thiru. Manjunath has said that, the stones mined from the quarry be transported by heavy vehicles which scatter the stones on the road which leads to the accident and therefore, they should be covered completely and transported in such a way that dust does emanated. He also asked that the roads be properly maintained and scattered gravels shall be removed in every 15 days. He also asked the quarry management to help the local school students and help the poor people by providing Blue Metal, M Sand in a subsidised price to build their houses.

**The Sub Collector, Hosur:**

The Sub Collector, Hosur asked the public to raise their hands if there was any objection to the proposed quarry project and she recorded that, there was no objection to the quarry project as no one from the public raised their hands. She also asked those supporting the proposed quarry project to raise their hands. All the public raised their hands and gave their support to the quarry project.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and

the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 5 number of petitions were received on the proposed Thiru S. Mahesh Kumar Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

12/7/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

12/07/2023

**Sub Collector**
**Hosur**

6/7

**District Collector**
**Krishnagiri**

6/7

**<u>தி/ள். எஸ்.மகேஷ் குமார் ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.72 (பகுதி), 87/1(பகுதி), டோரிப்பள்ளி கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 1.60.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 28.06.2023 அன்று தீர்த்தம் மெயின் ரோடு, அரசு உயர்நிலைப் பள்ளி அருகில், மாருதி நகர், பேரிகை, சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். பிவிஆர் & எல்எம்ஆர் கல்யாண மண்டபம், பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:</u>**

<u>பங்கேற்றோர்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R. சரண்யா, I.A.S., | : | சார் ஆட்சியர், ஓசூர்,<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.T.செந்தில் குமார் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | Er.S.நீலமேகம் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 5 | திரு.S. மகேஷ் குமார் | : | உரிமையாளர்<br>தி/ள்.S. மகேஷ் குமார் ரப் ஸ்டோன் குவாரி |
| 6 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 54 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள்.S. மகேஷ் குமார் ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் தி/ள்.S. மகேஷ் குமார் ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 24.05.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், தோரிப்பள்ளி, கோபத்தி, ஊங்கட்டி, தசானபுரம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள்.S. மகேஷ் குமார் ரப் ஸ்டோன் குவாரி

திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். S. மகேஷ் குமார் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.P.கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. பிரகாஷ், டோரிப்பள்ளி கிராமம்:**

திரு. பிரகாஷ் அவர்கள், குவாரியிலிருந்து 1 முதல் 1.5 கி.மீ வரையில் மண் சாலை அமைந்துள்ள எனவும் அச்சாலையில் கனரக வாகனங்கள் செல்லும் பொழுது தூசி எழும்புவதை தவிர்க்க தண்ணீர் தெளிப்பான்கள் மூலம் காலை மற்றும் மாலை ஆகிய இருவேளைகளிலும் சுமார் 5 முறை இருபுறமும் தண்ணீர் தெளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், பள்ளிக்கு அருகில் காலை மற்றும் மாலை வேளைகளில் சுமார் 1 மணி நேரம் குவாரியின் கனரக

வாகனங்களின் இயக்கத்தை தவிரிக்குமாறும் மேலும், கனரக வாகனங்கள் செல்லும் பொழுது விபத்தினை தவிர்க்க அதிவேகத்தில் செல்லாமல், வேகத்தை குறைத்து செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

2. **திரு. மஞ்சுநாத், டோரிப்பள்ளி கிராமம்:**

திரு. மஞ்சுநாத் அவர்கள், குவாரியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கற்களை கனரக வாகனங்கள் மூலம் ஏற்றிச் செல்லும் பொழுது அவை சாலையில் கற்களை சிதற விடுவதால் விபத்துகளுக்கு வித்திடுவதாகவும், எனவே, அவற்றை முழுமையாக மூடி தூசி எழும்பா வண்ணம் கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொண்டார். மேலும், 15 நாட்களுக்கு ஒருமுறை சாலைகளை முறையாக பராமரித்து ஜல்லி கற்களை அகற்றுமாறு கேட்டுக்கொண்டார். மேலும், உள்ளுரிலுள்ள பள்ளி மாணவர்களுக்கு உதவுமாறும் மற்றும் ஏழை மக்களுக்கு வீடு கட்டும் பொழுது ஜல்லி, எம் சாண்டு, ஆகியவை வழங்கி உதவுமாறு குவாரி நிர்வாகத்தினரிடம் கேட்டுக்கொண்டார்.

**சார் ஆட்சியர், ஓசூர்:**

சார் ஆட்சியர், ஓசூர் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி திட்டத்திற்கு, ஆட்சேபனை இருக்கும் பட்சத்தில் கைகளை உயர்த்துமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு பொது மக்கள் யாரும் கைகளை உயர்த்தாத காரணத்தினால், இக்குவாரி திட்டத்திற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை பதிவு செய்தார். மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி திட்டத்திற்கு, ஆதரவளிப்பவர்கள் தங்கள் கைகளை உயர்த்துமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு பொது மக்கள் அனைவரும் கைகளை உயர்த்தி இக்குவாரி திட்டத்திற்கு தங்களது ஆதரவினை வழங்கினர்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு

மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.S. மகேஷ் குமார் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 5 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள்.S. மகேஷ் குமார் ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

12/7/2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
ஓசூர்
12/07/2023

சார் ஆட்சியர்
ஓசூர்
3/7

மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி
3/7